தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 9 இதழ் : 9 ஜூலை – 2013




## வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

சங்கீதம் 115:15

# திருமண நாள் வாழ்த்து.

**08.07.2013**



**பேராயர். V. தேவதாஸ்**

**சகோதரி. வஹிதா தேவதாஸ்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. நம் ஷாலோம் மிஷன் ஸ்தாபகர் பேராயர் V. தேவதாஸ்– சகோதரி வஹிதா தேவதாஸ் தம்பதியரின் திருமண வாழ்வில், 08.07.2013 அன்று 28வது ஆண்டு திருமண நாளைக் காணும்படியாக தேவன் கிருபை செய்துள்ளார். தேவனுக்கே மகிமை!

இத்தனை ஆண்டுகள் தேவன் இவர்களுக்கு சுகம் பெலன் கொடுத்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமான பாத்திரங்களாக பயன்படுத்திவருவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு, இன்னும் பல்லாண்டுகள் சுகம் பெற்று பாரத தேசத்தில் குடும்பமாக தேவ சித்தத்தினை பூரணமாய் நிறைவேற்ற வாழ்த்துகிறோம். அந்த நாளில் அவர்கள் குடும்பத்திற்காக விசேஷமாக ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம்.

**- அன்பு பகிர்வு இயக்கம் தூத்துக்குடி அலுவலக மற்றும் முன்னேற்றப்பணி ஊழியர்கள்.**

**- ஷாலோம் பணித்தள அலுவலக மற்றும் Project ஊழியர்கள்**

**- அனைத்து ஷாலோம் திருமண்டலத்தின் திருச்சபைகள்**

**- ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள்.**

## சீஷத்துவப் பயிற்சி முகாம் - மே 2&3-2013 (நாக்பூர்)





தேவ கிருபையால், கடந்த மே 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் நாக்பூரில் **"பாரதிய சேவக் சங்கதி"** சபை ஐக்கியத்தின் மூலமாக நடைபெற்ற சீஷத்துவ முகாமில் பரிசுத்த ஆவியானவர், சபை வளர்ச்சி மற்றும் தேவன் விரும்பும் ஊழியர் குடும்பம் என்ற தலைப்புகளில் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். கலந்துகொண்ட போதகர்கள், மூப்பர்கள் மற்றும் வேதாகமப் பள்ளி மாணவர்கள் 400 பேர்மீதும் ஆவியானவரின் அபிஷேகம், விடுதலை, ஆசீர்வாதம் ஊற்றப்பட்டது. தேவனுக்கே மகிமை!

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பு வாழ்த்துக்கள். தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் தொடர்ந்து மிக ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது.

தேவ கிருபையால் **01.07.2013** அன்று நம் ஷாலோம் ஊழியத்தின் **22 ஆண்டுகள்** பணிகளை நிறைவேற்றி **23ம் ஆண்டில்** பிரவேசிக்க கிருபை தந்துள்ளார். இத்தனை வருடங்கள் தரிசனம் தந்து அழைத்த தேவன் உண்மை உள்ளவராக, தாங்கி, ஏந்தி, சுமந்து பாதுகாத்து நடத்தினாரே! மகிமை எல்லாம் திரியேக தேவனுக்கே செலுத்துகிறோம். எங்களை நேசித்து பீல் மக்களை நேசித்து தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கு ஜெபித்து தாங்கிய உங்கள் அனைவருக்கும் என் குடும்பத்தின் சார்பிலும், ஷாலோம் ஊழியத்தின் சார்பிலும் மிகுந்த நன்றியை இதயத்தின் ஆழத்திலிருந்து தெரிவிக்கிறோம்.

மேலும் **08.07.2013** அன்று எங்கள் வாழ்வில் ஆசீர்வாதமான திருமண நாளை காணுவதற்கு தேவன் கிருபை செய்கிறார். திருமணநாள் **(08.07.1985)** முதல் **28 வருடங்களாக** ஒரு குறைவின்றி நிறைவான இல்லற வாழ்வையும், பிள்ளைகளையும் தேவன் தந்து பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக வைத்த தேவனுக்கு நன்றி கூறுவதோடு அனைவரும் அந்நாளில், எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்து ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

குறிப்பாக பணித்தளத்தில் ஆதிவாசி கல்வி, மேம்பாட்டுத் திட்டங்களின் பொறுப்பில் இணைந்துள்ள மூத்த மகன் டைட்டஸ் மற்றும் ஊழியத்தின் Network பொறுப்பில் இணைந்துள்ள அவன் மனைவி மெர்லின் இவர்களுக்காக ஜெபியுங்கள். மேலும் Media பொறுப்பில் இருக்கும் இளைய மகன் ஷாலோம் அக்டோபர் மாதம் வரை Media சம்பந்தமான சிறப்புப் பயிற்சியை பெங்களூரில் பெற்றுக் கொண்டிருக்கிறான். அவனுக்காகவும் ஜெபியுங்கள். விசேஷமாக அன்பு மகள் ஜாய் ஷெக்கினா ரஷ்யாவில் மருத்துவப் படிப்பில் 3 ஆண்டுகளை முடித்து ஜுலை முதல் வாரம் 2 மாத விடுமுறைக்கு குஜராத் வரவிருக்கும் அவளுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள்.

தேவன் எங்களுக்கு கொடுத்த பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தை நம் தலைமுறையில் நிறைவேற்ற தொடர்ந்து உங்கள் ஜெபங்களையும், ஆதரவையும் எதிர் நோக்கியுள்ளோம். தேவன் இதுவரை தந்த 500 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் 600 க்கும் அதிகமான சபைகளுக்காகவும், தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், முன்னேற்றப் பணிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**"உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்"**.ஏசாயா. 44:3 ன்படி தேவன் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் அபரிவிதமாக, ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468 (குஜராத்) 9443965468 (தமிழ்நாடு)

# LojRWôúX ¿eLs BºoY§dLlThPYoLs!

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**“வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்”** சங். 115 : 15–ன் படி தேவன் தாமே இந்த புதிய மாதத்தில் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! அவர் நம்மை ஆசீர்வதிக்கும் போது, தன்னை **“யெகோவா எல்ஷடாய்”** என்று வெளிப்படுத்தினார். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி, நமக்கு அதிகாரத்தையும் வாக்குறுதிகளையும் கொடுத்து, நம்மை ஆசீர்வதித்துள்ளார். இப்படிப்பட்ட ஆண்டவரை நாம் தெய்வமாக கொண்டுள்ளபடியால் அவரை நன்றியுடன் துதிப்போம்.

**“கர்த்தரை தெய்வமாகக் கொண்டுள்ள ஜனம் பாக்கியமுள்ளது”**, என்று வேதம் சொல்லுகிறது. தேவன் நம்மை ஆசீர்வதிக்கத் தெரிந்து கொண்டபடியால் ஒருபோதும் ஆண்டவரை மறவாது அவரைத் துதிக்க வேண்டும். **“இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே எனக்குப் பிரியம்”** என்று சொன்ன சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் ஆசீர்வாத வாக்குத்தத்தங்களை நமக்குத் தந்ததோடு அதனை நிறைவேற்ற சில காரியங்களை நம்மிடமிருந்து எதிர்ப்பார்க்கிறார். இந்ததேவாசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியங்களில் சிலவற்றை வேதத்தின் வெளிச்சத்தில் ஆராய்வோம்.

## 1. கீழ்படிதலினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

**“நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்”.** (ஆதி. 22:17,18) ஆபிரகாமை ஆண்டவர் பேர் சொல்லி அழைத்து, உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொன்னது மட்டுமல்லாமல் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று சொல்லி உலகத்திலுள்ள ஜாதிகளுக்கு அவனை ஆசீர்வாதமாக மாற்றினார். அதே நேரத்தில் வாக்குத்தத்தம் பண்ணின ஆண்டவர் ஆபிரகாமுடைய வாழ்க்கையில் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தார். ஆதி 12:1–ம் வசனத்தில் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: **“நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ”**, என்று கூறி கீழ்படியச் சொன்னார். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க விரும்பும் பொழுது, நம்மிடத்தில் சிலவற்றை விட்டு விடு என்று கூறும் போது அவற்றை விட்டுவிட வேண்டும். அதே நேரத்தில் தேவனுடைய இருதயத்தில் நம்மைக் குறித்து என்ன சித்தம் கொண்டாரோ அதை அறிந்து நிறைவேற்ற வேண்டும். தாவீதைக் குறித்து தேவன் எப்படி சாட்சிக் கொடுத்தார். அப் 13:22 ஐ வாசித்துப்பாருங்கள். இத்தகைய முழுமையான கீழ்ப்படிதல் நமக்குத் தேவை.

என்னை தேவன் 20 வயதில் தீர்க்கத்தரிசனமாக பேர் சொல்லி அழைத்து ஜாதிகளுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என்று சொன்ன ஆண்டவர் நான் செய்து கொண்டிருந்த தொழிலை விட்டுவிடச் சொன்னார். நான் எனக்கு 20 வயது தானே ஆகிறது. 40 வயது வரை பணம் சம்பாதித்து விட்டு ஊழியத்திற்குச் செல்லலாம். அதுவரை பணம் தேவைதானே என்று நினைத்தேன். ஆனால் தேவன் என்னை உடனடியாக தொழிலை விட்டுவிடச் சொன்னதால் நான் கீழ்ப்படிந்தேன். எனவே ஆண்டவர் என்னை இன்று அநேக ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்துள்ளார். நீங்கள் ஆண்டவருடைய பிள்ளைகளாக இருக்கலாம். ஆனால் இன்னும் விட வேண்டிய சில காரியங்கள், வார்த்தைகள், பழக்கங்கள் இருக்குமாயின் அவைகளை விட்டுவிட்டால் தான் தேவன் உங்களுக்கு முன் குறித்த ஆசீர்வாதங்களை தந்தருளுவார்.

**2. தேவ நாமத்தை பிரஸ்தாபப்படுத்துவதால் உண்டாகும் ஆசீர்வாதம்.**

**நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்.** (யாத் 20:24) சீனாய் பருவதத்தில் ஆண்டவர் பிரசன்னமாகி ஜனங்கள் காணத்தக்கதாய் மோசேயிடன் முகமுகமாய்ப் பேசினார். அக்கினியின் மத்தியிலிருந்து திருவுளம் பற்றின ஆண்டவர் **“நான் என் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்”**, என்று கூறினார். நாம் வாழ்கின்ற உலகத்தில் பிரச்சனைகள், போராட்டங்கள், நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் இருந்தாலும் நாம் இருக்கிற எந்த ஸ்தானத்திலும் ஆண்டவரை பிரஸ்தாபப்படுத்தும் போது **தேவன் உன்னிடத்தில் வந்து** ஆசீர்வதிப்பேன் என்று வாக்குரைத்துள்ளார்.

1சாமு 17–ம் அதிகாரத்தில் யுத்த களத்தில் தாவீது கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகிறான். விருத்தசேதனமில்லாத கோலியாத் தேவ ஜனங்களை கலங்கப்பண்ணின அந்த வேளையில் தாவீது ஆண்டவருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தி, **“நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்”.** (1சாமு 17 :45) என்று தேவ நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகிறான். அன்றையத்தினம் ஆண்டவர் கோலியாத்தை தாவீதின் கைகளினால் முறியடித்து, தாவீதை கனப்படுத்தி ஆசீர்வதித்தார்.

ஏசாயா தீர்க்கத்தரிசி யெசபேலின் நாட்களில் பாகாலின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கர்மேல் பருவதத்தில் “ என் தேவனாகிய கர்த்தாவே இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும் ” (1இராஜா 18: 38) ஆண்டவருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தி ஜெபித்தபொழுது தேவன் அக்கினியினால் பதில் கொடுத்து எலியாவை கனப்படுத்தி ஆசீர்வதித்தார். கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன் என்று ஜனங்கள் அறிக்கை செய்தார்கள். பாகாலின் தீர்க்கத்தரிசிகளும் பாகாலின் ஆளுகையும் தேசத்தில் அழிக்கப்பட்டது.

புறஜாதிகளின் மத்தியில் அழைத்துச் செல்லப்பட்ட தானியேலுக்கு விரோதமாக இயற்றப்பட்ட சட்டங்களில் ராஜாவும் கையெழுத்திட்டாலும் தானியேல் வழக்கத்தின்படியே ஆண்டவரின் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தினபொழுது சிங்கக் கெபியிலே போடப்பட்டாலும் ஆண்டவர் சிங்கத்தின் வாயைக் கட்டினார். சட்டத்தை இயற்றின ராஜா இரவு முழுவதும்

போஜனம் பண்ணாமலும், கீத வாத்தியம் முதலானவைகளைக் கேட்க மனமில்லாதவனாகவும், நித்திரை வராமலும் தவிக்கிறான். ஆனால் தேவ நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்திய தானியேலோ சிங்கக் கெபியிலே பாதுகாப்போடு சுகமாக இருந்தான். அவனுக்கு விரோதமாக சட்டம் இயற்றினவர்களையோ சிங்கங்கள் கொன்று போட்டது. (தானி 6:6–28).

நாம் யுத்தகளத்திலோ அசுத்த ஆவி ஆளுகை செய்கிற இடத்திலோ இருக்கும் போது நமக்கு விரோதமாக சட்டங்கள் இயற்றப்பட்டாலும் தேவ நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் போது அந்த இடத்தில் ஆண்டவர் வந்து நம்மை ஆசீர்வதிப்பார்.


நம்முடைய 3 மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் 15 வருடங்களுக்கு முன்பு பயங்கரமான எதிர்ப்புகள், பிரச்சனைகள், அநேகப் பாடுகள் போன்றவற்றை நாங்களும் நம் சுதேச ஊழியர்களும் கடந்து வந்தோம். இன்று ஒவ்வொரு கிராம சபைகளிலும் விசுவாசிகள் தேவனை ஆராதித்து அவர் நாமத்தை உயர்த்துகிறார்கள். இயேசுவின் நாமத்திற்காக துன்பங்களையும், பாடுகளையும் சகித்து அதை பாக்கியமாக கருதி இயேசுவின் நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகிறார்கள், தேவனும் அவர்களை கனப்படுத்துகிறார். இன்று 80 கிராமங்களுக்கும் மேலாக கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் நமது ஷாலோம் விசுவாசிகளாக உயர்த்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். தேவனுக்கே மகிமை.

## 3. தேவ இராஜ்ஜியத்தைக் கட்டுவதினால் கிடைக்கும் ஆசீர்வாதம்

சர்வ வல்லமையுள்ள தேவன் தம் ஜனத்தைப் பார்த்து, **“நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்”**, ( ஆகாய் 2: 19) என்று சொல்கிறார். ஆனால் அதற்கு முன்பு ஆகாய் 1:8–ல் **நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்** என்று கர்த்தர் சொல்லுவதைப் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் **நீங்களே அந்த ஆலயம்** என்று சொல்லியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இந்த கடைசி நாட்களில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டியெழுப்புகிறார். (எபே 2: 20–22) இன்று உலகமெங்கும் வளர்ந்து வரும் மணவாட்டி சபைக்கு இயேசு மூலைக்கல்லாயிருக்கிறார். அநேக அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் (மிஷனெரிகள்) தலைமுறை தலைமுறையாய் அஸ்திபாரமாய் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த அஸ்திபாரத்தின் மீது நின்று கொண்டிருக்கும் நாம் நம்முடைய தலைமுறையில் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்து தேவ இராஜ்ஜியத்தைக் கட்டும்பொழுது ஆண்டவர் பிரியமாயிருக்கிறார். அதன் மூலம் தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணுகிறார்.

இன்று பீல் ஆதிவாசி மக்கள் நடுவில் ஆதி அப்போஸ்தலர் நாட்களில் காணப்பட்ட அற்புத அடையாளங்களோடு தேவ நாமம் மகிமைப்பட்டு வருகிறது. இயேசுவின் நாமம் ஜாதிகளுக்குள்ளே உயர்த்தப்படுகிறது. இப்படியாக ஆண்டவர் நமக்குக் கொடுத்த தாலந்துகளை அவருடைய பணிக்காகவும், செல்வங்களை வட இந்தியாவில் சுவிஷேசம் அறிவிக்கப்படாத இடங்களில் மிஷனெரிகளை அனுப்பி, ஆலயங்களைக் கட்டிக் கொடுத்து, ஆண்டவரைப் பிரஸ்தாபப்படுத்தும் பொழுது ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார். தேசமெங்கும் தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும்பொழுது ஆண்டவர் நம்மீது பிரியமாயிருந்து இன்று முதல் நம்மை ஆசீர்வதிப்பார்.

# இயேசுவின் திரைப்பட ஊழியம்



இந்தியா கேம்பஸ் குருசேட் மூலமாக நம் ஊழியத்தில் 1992 முதல் 2000 வரை **"இயேசு"** திரைப்பட ஊழியத்தின் மூலமாக கிராமங்கள் தோறும் ஜெனரேட்டர், மற்றும் புரோஜக்டர் (Projector) மூலமாக காண்பிக்கப்பட்டது. அதன் விளைவாக அந்த இரவிலே அநேக அற்புதங்கள் நடைபெற்றது. பின் தொடர் ஊழியமாக அநேக புதிய கிராமங்களில் அதிக குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, சுதேச ஊழியர்களும் எழும்பினார்கள். தற்போது கேம்பஸ் குருசேட் ஊழியத்தில் **"இயேசு திரைப்படக் குழு"** அமைப்பு இல்லாதபடியால் கடந்த 10 வருடங்களாக இந்த ஊழியத்தை கிராமங்களில் நடத்த முடியவில்லை.

கடந்த ஆண்டில் இயேசு விடுவிக்கிறார் மூலமாக நற்செய்திப் பணிக்காக கொடுக்கப்பட்ட Tata Majic வேன், ஜெனரேட்டர், சிறந்த ஒலிப் பெருக்கி சாதனங்கள் பயன்படுத்தி அலுவலகத்தில் இருந்த பழைய LCD புரோஜக்டர் மூலமாக நம் சுதேச ஊழியர்கள் பால் முனியா, ரன்சிங் பாகோர், தும்சிங் பாரியா மூவரும் இணைந்து காப்டு, தேய்டாவத், நவகாம், மோகன்பூரா, தேடா, முண்டேத், பர்கேடா ஆகிய 7 கிராமங்களில் LCD புரோஜக்டர் மூலமாக காட்டுகிறார்கள். ஒவ்வொரு கிராமங்களில் 300 முதல் 500 பேர்கள் வரை கூடி கண்டு ஆசீர்வாதம் பெற்றார்கள்.

இந்த திரைப்பட ஊழியம் மூலம் விசுவாசிகள் பலப்பட்டார்கள், புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி நிற்பதுடன் புதிய குடும்பங்கள் இயேசுவின் வாழ்க்கை வரலாறு படக்காட்சியின் மூலமாக தொடப்பட்டு ஷாலோம் சுகமளிக்கும் கூட்டத்திலும் ஞாயிறு ஆராதனையிலும் பங்கு பெற ஆரம்பித்து விட்டார்கள். எழுதப் படிக்கத் தெரியாத பீல்மக்கள் திரைப்பட ஊழியம் மூலம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதி இல்லாததால் வீடுகளில் T.V, DVD பிளேயர் வசதிகளும் கிடையாது.

மேலும் இத் திரைப்பட ஊழியத்தை நிறைவேற்ற 4 செட் வேன், ஜெனரேட்டர், ஒலி பெருக்கி சாதனங்கள் நமக்கு இருப்பதால் **உடனடியாக Rs. 38,000/– மதிப்பில் 4 LCD புரோஜக்டர் தேவை.** இதன் மூலம் மாதம் குறைந்தது 20 காட்சிகள் மூலம் மாதந்தோறும் 80 கிராமங்களை சந்திக்க முடியும். மாதந்தோறும் குறைந்தது 30,000 க்கும் அதிகமான ஆத்துமாக்கள் சந்திக்கப்படுவார்கள். குடும்பமாகவோ, சபையாகவோ LCD புரோஜக்டர் வாங்கிக் கொடுத்து ஆத்தும ஆதாய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



**"என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது". (பிலி. 4:3)**

# அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?

(சக. 4:10)

## `ôúXôm BWmTLôX F¯VeLs (1991)

**1–7–1991** அன்றுதான் குஜராத் மாநிலத்தில் ஜாலோத் ஊருக்கு வந்து முதன்முதலாக ஷாலோம் ஊழியப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அற்பமான அந்த நாளுக்கு முன்பாக நாங்கள் தேவனால் உருவாக்கப்பட்ட நாட்களை மறக்க இயலாது.

**1985 – 1990** வரை ஐந்து ஆண்டுகள் இந்திய மிஷனெரி சங்கத்துடன் இணைந்து பீல் மக்கள் தரிசனப் பணியை நிறைவேற்றிய பின்பு, ஆவியானவர் தந்த தரிசனத்தின்படியும், வழிநடத்துதலின்படியும் IMS ஸ்தாபனத்திலிருந்து எங்களை விடுவித்தபோது அனைத்து சபைகள், ஊழியங்கள், ஆத்துமாக்கள் மற்றும் அனைத்து தளவாடங்கள், உடைமைகள் முதலான ஒன்றையும் இச்சிக்காத வண்ணம் ஒப்படைத்து வந்தோம். ஊழியர்களையும் ஆத்துமாக்களையும் பிரித்து விடாதபடி இறுதிவரை தேவனுக்காக IMS –ல் இருக்கும்படி ஆலோசனை கூறினோம். அடுத்த தாலுகாவான ஜாலோத் சென்று ஊழியம் ஆரம்பிக்க திட்டமிட்டோம்.

அந்த நாட்களில் என் மனைவிக்கு பிரசவகாலம் நெருங்கினபடியால் பிரசவகாலத்திற்குப் பின்பு முன் பணி செய்த துதியா ஊரை விட்டு வெளியேற வாக்களித்தோம். ஒரே ஒரு அமர்சிங் என்ற 8வது வரை படித்த பையனை வீட்டு வேலைக்கு உதவி செய்ய அனுமதியுடன் வைத்திருந்தோம். தேவனிடத்தில் நீண்ட நாட்களாக ஆசையுடன் ஜெபித்த பெண்குழந்தை **“ஷாரோனை”** தேவன் தந்தார். மிகவும் அழகான குட்டிப்பாப்பா ஷாரோனைக் கண்டு என் பையன்கள் டைட்டஸ், ஷாலோம் அதிக மகிழ்ச்சியுற்றார்கள்.



சில தினங்களுக்குப் பின்பு (24–6–1991 அன்று) குழந்தை சுகவீனப்பட்டது. மருத்துவ வசதி சரியாக இல்லை. பரோடாவுக்கு கொண்டு செல்ல மருத்துவர் கூறினார். கைகளில் பணமும் இல்லை என்ன செய்வதென்று தாகோத் ஊர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும் போது **“ஷாரோன்”** எங்களை விட்டுப் பிரிந்து விட்டதை அறிந்தோம். 100 வருடங்களுக்கு முன்பு IP Mission மூலம் வந்த மிஷனெரிகளின் கல்லறைக்கு அருகில் அவளை நல்லடக்கம் செய்தோம். டைட்டஸ், ஷாலோம் **“ஷாரோன்”** பாப்பா எங்கே என வினவினார்கள். கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார் அவருக்கே ஸ்தோத்திரம் என்று சொன்னோம். பிஞ்சு உள்ளங்களை தேவன் தேற்றினார். ஆறுதல்இல்லாத எங்களைத் தேவனே தேற்றினார்.

இந்நிலையில் வீடு கிடைக்கவில்லை. ஜாலோத் நகரத்தில் இறுதியாக “பேய்வீடு” என்று அழைக்கப்பட்ட வீடு ரூ. 625/– மாத வாடகையில் கிடைத்தது. ஆனால் அது பல வருடங்களாக ஆலயமாக இருந்தது. கிறிஸ்தவர்கள் இல்லாதபடியால் ரூ. 2000க்கு விற்கப்பட்டு குடியிருப்பாக மாறினது. அங்கு குடியேறிப்போனவர்கள் பலர் மரித்து விடுவதால் “பேய் பங்களா” என்று அழைத்தார்கள்.



பேய்வீடு என்று அழைக்கப்பட்ட வீடு

1-7-1991 அன்று பிள்ளைகளுடன் ஜாலோத் ஊரில் கிடைத்த வீட்டில் ஜெபித்து உள்ளே சென்றோம். ஷாரோன் மரித்த வேதனை ஒரு புறம் இருந்தது. தனிமையும், பணக் கஷ்டமும் மறுபுறம். சில தினங்களுக்குப் பின் நாங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவர் இயேசு எங்கள் அறையில் பிரசன்னமானார். **"ஷாரோனைக் குறித்து கலங்க வேண்டாம். என்னிடத்தில் இருக்கிறாள். கோதுமை மணி இந்த நிலத்தில் விழுந்தபடியால் ஆயிரமாயிரம் குடும்பங்களை உங்களுக்குத் தருவேன். அற்புத அடையாளங்கள் மூலமாக என்னை பீல் மக்களுக்கு வெளிப்படுத்துவேன்"** என்று இயேசு கூறினார். அவ்வளவுதான்! எங்கள் துக்கங்கள் மாறின! ஆண்டவர் சொன்னபடி வெள்ளிக்கிழமை கூட்டம் ஆரம்பித்தோம்.

முதல் வாரக் கூட்டத்தில் ராம்சிங் பாய் என்ற சாராயம் காய்ச்சும் குடும்பமும் சவ்ஜி பாய் என்ற மந்திரவாதி குடும்பமும் ஜெபிப்பதற்காக வந்தார்கள். தேவன் இவர்களுக்குள் இருந்த 21 வருட பிசாசின் கட்டுகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுதலை கொடுத்தார். அதைத் தொடர்ந்து இவர்கள் கூறின சாட்சி மூலமாக, அடுத்த வாரம் 20 பேர்கள் வந்தார்கள். குருடர்கள் பார்வையடைந்தார்கள். செவிடர்கள் கேட்டார்கள். வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைந்தார்கள். பிசாசு பிடியினின்றும் பாவத்தின் பிடியினின்றும் அநேகர் விடுதலை பெற்றார்கள். அதைத் தொடர்ந்து 50, 60 பேர் ஒவ்வொரு வாரமும் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள்.



பேய்கள் துரத்தப்படுகின்றன



குருடர்கள் பார்வையடைகின்றனர்

நான்கு மாதங்கள் கழிந்த பின் **சகோ. G.P.S. ராபின்சன்** அவர்கள் பணித்தளத்திற்கு வந்து சிறப்புக் கூட்டங்களை நடத்தினார்கள். முதல் கூட்டத்தில் சுமார் 85 பேர் பங்கு பெற்றார்கள். அநேக அற்புதங்கள் நடைபெற்றன. இரவு வீட்டில் நடைபெற்றகூட்டத்தில் சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் குறிப்பாக என் மனைவி வஹிதாவும் பரிசுத்த ஆவியினால் அபரிமிதமாய் நிரப்பப்பட்டார்கள்.

சுதேச ஊழியர்களையும் தேவன் பயன்படுத்த ஆரம்பித்தார். 14 கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் உருவாயின. முதன்முறையாக கிறிஸ்துமஸ் மேளாவை 1991-ல் நடத்தினோம். இயேசு பிறப்பின் நற்செய்தியை முதன் முறையாக 300 பேர்கள் அறிந்து கொண்டு, முதல் உண்மையான கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆசரித்தார்கள். 1992 ஜுலையில் (1வருடத்தில்) 7 சுதேச ஊழியர்கள் ஒப்புக் கொடுத்தார்கள். 12 மாதங்களில் சுமார் 500 பேர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தேவன் தந்த வளர்ச்சியைக் கண்டு பிரமித்தோம். **தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.**

## ஷாலோம் ஊழியங்கள் தேவ அறுவடைப் பணியில் 25ம் ஆண்டு வெள்ளி விழாவை நோக்கி

### (2016 ஜூலையில்)

பிரியமானவர்களே, தேவ கிருபையால் 1991 ஜூலை 16 ம் தேதி (ஆரம்பிக்கப்பட்ட பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில்) ஷாலோம் மிஷனெரி ஊழியப் பாதையில் 22 வருடங்களைக் கடந்து வர தேவன் கிருபை தந்துள்ளார்.

**“தேவன் இது வரை தந்த ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதிப்போம். 500–க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்கள், 650 கிராமங்களில் திருச்சபைகளை எழுப்பி, 250 ஆலயங்கள் கட்டவும், 1300 கிராமங்களில் நற்செய்தி அறிவித்து விசுவாசிகளை எழுப்பவும் தேவன் கிருபை தந்துள்ளார்”.** சுமார் 1,30,000 க்கும் அதிகமான விசுவாசிகளையும், சுமார் 4500 மூப்பர்களையும் தேவன் தந்துள்ளார். 400 கிராம சபைகளில் நேர்த்தியாக ஓய்வு நாள் பாடசாலைகள் நடைபெறவும், CBC 10 நாட்கள் பணிகள் மூலமாக 30,000 க்கும் அதிகமான சிறுவர்கள் தேவனண்டை வழி நடத்த கிருபை பெற்றோம். பள்ளிக்கூடம், மாணவர் விடுதி, கல்விப் பணிக்கான உதவி, மற்றும் Compassion Project இவைகள் மூலமாக சுமார் 2000 ஆதிவாசி மாணவர்கள் பயன்பெற்றும் வருகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், அற்புத அடையாளங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த 2011 ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற நம் சுதேச ஊழியர்கள் குடும்ப கூடுகையின் போது, அன்பு சகோதரர். **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் 2016 ம் ஆண்டுக்குள் 10 இலட்ச ஆத்துமாக்களை அறுவடை செய்ய, சுவிஷேசம் அறிவிக்க புதிய திட்டங்களை தேவன் தந்துள்ளார். உள்ளங்கை அன்பு மேகத்தை இப்பொழுதே காண்கிறோம்.

வெள்ளி விழா ஆண்டிற்குள் (2016 ஜூலைக்குள்) அதாவது இன்னும் 36 மாதங்களுக்குள் நம் சுதேச ஊழியர்கள் அனைவரும் ஆளுக்கொரு புதிய சபையையும், புதிய ஊழியரையும் உருவாக்க தீர்மானம் எடுத்துள்ளார்கள். ஒவ்வொரு விசுவாசிகளும் 36 மாதங்களுக்குள் 10 குடும்பங்களைத் தேவனண்டை நடத்த உறுதி கொண்டு ஜெபித்து, சுவிஷேசம் அறிவிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சிறப்பு நற்செய்திக் கூடுகை மற்றும் இயேசு திரைப்பட ஊழியங்கள் மூலம் ஆவியானவரின் பெலத்தோடு நிச்சயமாக இவைகள் நிறைவேறும்.

இம் மாபெரும் அறுவடைப் பணியை நிறைவேற்றும் போது பின்வரும் திட்டங்களை நாம் நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்.

---

“... நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்படியாதவனாயிருக்கவில்லை.” (அப். 26 : 19)

## ஷாலோம் 25 ஆண்டுகள் வெள்ளி விழா நிறைவுத் திட்டங்கள்

(2016 ஜூலை மாதத்திற்குள்...)

1000 பீல் சுதேச ஊழியர்கள் (போதகர்கள்)

2000 கிராம சபைகள்

1000 ஆலயங்கள்

15,000 மூப்பர்களுக்கான சிறப்புப் பயிற்சி கொடுத்து உருவாக்குதல்

3 இலட்ச ஆதிவாசி சிறுவர்கள் ஊழியங்கள் (Sunday School, CBC)

2 இலட்ச வாலிபர்களை தேவனண்டை நடத்துதல்

3 மாநிலங்களில் ஆத்தும ஆதாயப் பயிற்சிக் கூடங்கள் (Training Centres)

1 ஷாலோம் வேதாகமக் கல்லூரி (Shalom Bible College)

3 மாநிலங்களில் 3 ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள்

3 மாநிலங்களில் 10 ஹிந்தி/ குஜராத்தி பள்ளிக்கூடங்கள்

1 ஷாலோம் கல்லூரி

1 ஷாலோம் மருத்துவமனைப் பணிகள்

மூன்று மாநிலங்களிலும் 3 ஷாலோம் திருமண்டலங்கள் உருவாக மேலும் ஆவியானவர் தரும் திட்டங்கள் பற்பல.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இவைகளை ஆவியானவரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றும் போது உங்கள் ஜெபங்களையும், ஆதரவையும் அதிகமாய் எதிர்ப்பார்க்கிறோம். நம்முடைய ஷாலோம் பணிகளின் தேவைகளையும் உங்கள் பங்கு பகுதியை வாசித்து செயல்படுங்கள்.

குறிப்பாக நம் ஷாலோம் பணிகளை உங்கள் பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், சபையாருக்கு அறிமுகம் செய்து குறைந்தது 5 ஆதரவாளர்களை அறிமுகம் செய்து தர அன்புடன் வேண்டுகிறோம். விஷேசமாக ரூ. 500/– கொடுத்துத் தாங்கக்கூடிய ஷாலோம் பங்காளர்கள் 1000 பேர்கள் எழும்பவும் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஷாலோம் பிரதிநிதிகள் எழுப்பப்பட ஜெபிக்கவும், செயல்படவும் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை." ஆபகூக் 2 : 3




# வேதம் வழங்குவோம் வாருங்கள்

***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் மற்றும் பீல் ஆதிவாசி வாலிபர்களுக்கு புதிய ஏற்பாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2012 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்களை வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **“சிறப்பு விருது”** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!


2013ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் மற்றும் 5000 புதிய ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ரூ. 100/– வீதம் 10000 வேதாகமங்களுக்கும், வாலிபர்களுக்குக் கொடுப்பதற்காக ரூ. 50/– வீதம் 5000 புதிய ஏற்பாடுகளுக்கும் நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி **ரூ. 10,25,000/–** கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்கள் மற்றும் புதிய ஏற்பாடுகளை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம்.

அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,**

**என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.** சங்கீதம். 119 : 105

சுதேச ஊழியரின் சாட்சி



# போதகர். ரமேஷ் M. வாசுனியா

**பாடல்வா,** மத்தியப்பிரதேசம்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் ரமேஷ் M. வாசுனியா. நான் மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் ஜாபுவா மாவட்டத்தில் ஜாயிடா என்ற கிராமத்தில் மிகவும் பின் தங்கிய பீல் ஆதிவாசி குடும்பத்தில் பிறந்தவன். வில் அம்புகளைக் கொண்டு கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் எங்கள் பகுதி ஜனங்கள். குடிப்பதும், வெறிப்பதும், முரட்டாட்டமாக சண்டையிடுவதும் அவர்களின் அன்றாக வாழ்க்கையாக இருந்தது. இந்த சூழ்நிலையில் பிறந்த நானும் பாவம் என்றால் என்னவென்றே தெரியாமல் வாழ்ந்து வந்தேன்.

எங்கள் குடும்பம் பிசாசின் கட்டுகளில் சிக்கி நிம்மதியின்றி தவித்தது. இந்த சமயத்தில் பக்கத்துக் கிராமமாகிய அந்தர்வேலியாவில் சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெறுவதைக் குறித்துக் கேள்விப்பட்டு, எனது பெற்றோர்கள் அங்கு சென்று கூட்டத்தில் பங்கெடுத்தார்கள். அந்தக் கூட்டத்தில் பிசாசின் பிடியிலிருந்தும் சரீர வியாதிகளிலிருந்தும் ஒரு பெரிய விடுதலையைப் பெற்றார்கள். அதன்பின் அங்கிருந்து எனக்கு ஒரு வேதாகமம் வாங்கி வந்து அதை வாசிக்கும்படி கூறினார்கள்.

நான் அதைத் தொடர்ந்து வாசிக்க பாவ உணர்வடைந்தேன். அதன்பின் எனது பெற்றோரோடு கூட்டங்களில் பங்கெடுக்க ஆரம்பித்தேன். ஆண்டவர் எனது பாவங்களை மன்னித்து என்னை இரட்சித்தார். அதன்பின் கர்த்தர் என்னை அபிஷேகித்து ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பினை ஏற்று குறுகிய கால வேதாகமப்பயிற்சி பெற்று ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். 1998ம் ஆண்டு திறப்பின் வாசல் ஜெபத்தில் சகோ. மோகன் சி. லாசரஸ், நாலுமாவடி அவர்கள் மூலமாக குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு, தற்போது எனது கிராமத்தினை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறோம். எனக்காக, ஊழியங்களுக்காக, குடும்பத்திற்காக ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mr. Christopher Selvaraj, Palayamkottai.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600க்கும் அதிகமான ஸ்தல சபைகளை ஊருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## SHALOM CBC ஆசிரியர் பயிற்சி - 2013

தேவ கிருபையால் இந்த ஆண்டு சிறுவர்களுக்கென CBC **"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பில் பாடங்களைத் தயாரித்து அச்சடிக்கப்பட்டடு கடந்த ஏப்ரல் மாதம் மூன்று மாநிலத்திலுள்ள ஷாலோம் சபைகளில் உள்ள CBC, ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கும், விசேஷித்த பயிற்சி கொடுக்கப்பட்டு, ஏப்ரல் 15, 16–ம் தேதிகளில் மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கும், 18,19–ம் தேதிகளில் இராஜஸ்தான் மற்றும் 22 & 23 தேதிகளில் குஜராத் ஊழியர்களுக்கும், மற்றும் 25 ம் தேதி மூன்று மாநிலங்களிலும் வர தடைபட்ட ஆசிரியர்களுக்கென்றும் CBC பயிற்சிகள் தாகோத் CNI Church Hall–லில் வைத்து நடைபெற்றது. 4 குழுவாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்ட 7 நாள் பயிற்சியில் சுமார் 1004 இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்களும், இப்பயிற்சியில் அனைத்து போதகர்கள் மற்றும் மனைவிமார்களும் கலந்து கொண்டார்கள்.

நடத்தப்பட்ட 4 பயிற்சியிலும் முதல் நாளில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். அனைத்துப் பயிற்சியிலும், **சகோ. ஜெயராஜ், சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோ. கேரட்** அவர்கள் காலை தியான வேளையில் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்**அவர்கள் இந்த 7 நாட்கள் இயக்குநர் பயிற்சியை முழுவதுமாக பொறுப்பேற்று நடத்தினார்கள். பாடல், ஆராதனை மற்றும் அபிநயப் பாடல் ஆகியவற்றை **சகோ. பிராங்கிளின்** அவர்கள் நடத்தினார்கள். கூடி வந்திருந்த அனைவரும் தேவனை பயபக்தியோடு ஆராதித்தார்கள். மிகவும் சந்தோஷத்துடன் ஒவ்வொரு அபிநயப் பாடல்களையும், செய்கையுடன் பாடி மகிழ்ந்தார்கள். அபிநயப் பாடல்களைப் பயிற்றுவிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களுக்கு விசேஷ பயிற்சி கொடுக்கப்பட்டு, பயிற்சி நாட்களின் போது பங்கு பெற்ற இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

**"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பில் 10 நாட்களுக்கும், 10 தலைப்புகள் மற்றும் வேத பாடங்கள், கதைகள், மனப்பாட வசனங்கள், பாடல்கள் தலைப்புக்கு ஏற்றவாறு Shalom Training unit –ல் உள்ள நமது ஊழியர்கள் சிறப்பாக செய்ய தேவன் கிருபை தந்தார். **சகோ. அணில் சௌஹான், சகோ. பாவ்சிங் கட்டாரா, சகோ. விகாஸ் கராசியா** ஆகியோர் இந்த 10 நாள் பாடங்களை நேர்த்தியாக மக்களுக்கு வகுப்புகளை நடத்தி புரிய வைத்தார்கள். **சகோ. பாவ்சிங் கட்டாரா** அவர்கள் பொருட்களை வைத்து எப்படி பிள்ளைகளுக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பது என்று விளக்கினார்கள். **சகோ. விகாஸ் கராசியா** அவர்கள் படங்களை வைத்து எப்படி பாடங்களைக் கற்றுக் கொடுப்பது என்று விளக்கினார்கள். **சகோ. அணில் சௌஹான்** அவர்கள் குரல்களை மாற்றி பேசுவதன் மூலமும், குறுநாடகத்தின் மூலமும் எப்படி கற்றுக் கொடுப்பது என்று விளக்கினார்கள்.

பின்பு பல, குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவரை நியமித்து, குழு கலந்தாய்வு மூலமாக, CBC ஐ நடத்தவும் கதைகள் மற்றும் மனப்பாட வசனங்களை கற்றுக் கொடுப்பது பற்றி விளக்கிக் கூறப்பட்டது. பின்பு மனப்பாட வசனம், பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டு, பதில் சொன்னவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு, பின் Puppet Show மூலம் கதைகள் கூறப்பட்டது. ஜீவனைக் கொடுக்கும் நண்பன் என்ற தலைப்பில் **"இயேசு கிறிஸ்து தான் ஜீவனைக் கொடுக்கும் நண்பன்"** என்பதை குறுநாடகத்தின் மூலம் விளக்கிக் காட்டப்பட்டது.

இந்த ஆண்டு CBC-க்கென்று மொத்தம் 30,000 புத்தகங்களும், பாடல் புத்தகங்களும், 1000 ஆசிரியர் கையேடுகளும் வழங்கப்பட்டதோடு கலர் பென்சில், Gum மற்றும் வசன அட்டைகள், படங்கள், Portions அனைத்து சபைகளுக்கும் வழங்கப்பட்டது. அதோடு **"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பில் CBC க்கான Audio CD 1000 மற்றும் VCD 200 தயாரிக்கப்பட்டு நமது சபைகளுக்கு வழங்கப்பட்டது. 7 நாட்கள் பயிற்சியையும் நல்ல முறையில் நடத்தி முடிக்க தேவன் கிருபை செய்தார். நிச்சயமாக பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் உண்மையான நண்பன் இயேசு என்பதை தெரிந்து கொண்டதோடு மட்டுமின்றி தங்கள் கிராமங்களிலும் சபைகளிலும் உள்ள சிறுவர்களுக்கும் கண்டிப்பாக கூறுவோம் என்ற உறுதியோடு திரும்பிச் சென்றார்கள். தேவனுக்கே மகிமையைச் செலுத்துகிறோம்.

## SHALOM CBC வகுப்புகள் - 2013

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஏப்ரல் மாதம் பயிற்சிகள் எடுத்த CBC இயக்குநர்களும், ஆசிரியர்களும் Pastorsகளும் அவரவர் தங்களின் சபைகளில் மே மாதம் 6ம் தேதியிலிருந்து 15ம் தேதி வரையும் 10 நாட்கள் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் சபை விசுவாசிகளின் பிள்ளைகள் மட்டுமின்றி கிராம மக்களின் பிள்ளைகளும் பங்கு பெற்றார்கள், ஒவ்வொரு பாடத் தலைப்பில், பாடங்களும், Action பாடல்களும், கதைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டது. படங்களில் கலர் அடிப்பதிலும் பிள்ளைகள் உற்சாகம் காட்டி, மிகவும் ஆர்வமாய் தினமும் தவறாது வந்து பங்குப் பெற்றார்கள். ஒவ்வொரு நாளும் சபையின் மூப்பர்கள் பிள்ளைகளுக்கு சிற்றுண்டி கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள். **"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு 10 மனப்பாட வசனங்களையும் கற்று, பிள்ளைகள் மனப்பாடமாய் கூறினார்கள். அர்த்தமுள்ள பாடல்களை, நன்றாக செய்கையுடன் பாடி மகிழ்ந்தார்கள்.

30,000 புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு CBC நடத்தப்பட்டது. கிராமத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளும் பங்குபெற்றதால் 30,000–க்கும் மேலான புத்தகங்கள் தேவைப்பட்டது. மட்டுமல்லாமல், எல்லா பீல் சிறுவர்களும், இந்த CBC மூலமாக, இயேசுவை சொந்த இரட்சகராக, மட்டுமல்லாமல் சொந்த நண்பனாகவும் ஏற்றுக் கொண்டார்கள். கடைசியில் பிள்ளைகள் அதிகமாய் சாட்சிகளைக் கூறினார்கள். இயேசு தான் எங்கள் நண்பன் என்றும் இந்த நண்பனை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம் என்றும் சாட்சி பகர்ந்தார்கள்.

CBC நடத்தியவர்கள் பொறுப்பாகவும், உற்சாகமாகவும் தியாகத்துடனும் ஆத்துமப் பாரத்தோடும் செயல்பட்டார்கள். இதில் எல்லாருடைய ஒத்துழைப்பும் காணப்பட்டது. நடத்துபவர்கள் பிள்ளைகள், சபை போதகர்கள், மூப்பர்கள், விசுவாசிகள் யாவருமே ஆர்வம் காட்டி இதை செய்தபடியால் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

கடைசியில், மே மாதம் 19 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை என்று எல்லா சபைகளிலும் கொண்டாடப்பட்டது. இதில் சிறுவர்களே முழு பொறுப்பையும் எடுத்து அந்த நாளில் ஞாயிறு ஆராதனையை நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளைகள் மனப்பாட வசனங்களைக் கூறி, நாடகங்களை நடத்தி, கதை சொல்லி, குட்டி பிரசங்கமே செய்து, ஜெபம் செய்து, நடத்தினதைப் பார்த்து எல்லோருக்கும் மிக ஆச்சரியமாய் இருந்தது. தேவனுக்கு நன்றி செலுத்தி உள்ளத்தின் ஆழத்திலிருந்து கண்ணீருடன் துதித்தார்கள். தேவனுக்கே மகிமை!

# ஷாலோம் CBC வகுப்புகளில் சிறுவர்கள் மத்தியில் தேவன் எழுப்பிய சாட்சிகளில் சில

## குஜராத்

**பெயர் : நிலேஷ் கட்டாரா** **கிராமம் : ஹடுமத் கூட்டா**

நான் எப்பொழுதும் தம்பாக்கு போட்டுக் கொண்டேயிருப்பேன். இந்த வருடம் CBC வகுப்பில் 10 நாட்களும் பங்குபெற்றேன். இயேசுவை எனது நண்பனாக ஏற்றுக் கொண்டதால், தேவன் எனக்கு தம்பாக்குப் போடுவதிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**பெயர் : சுரேஷ் ராட்டோடு** **கிராமம் : காளியாவட்**

8ம் வகுப்பு படிக்கும் நான் பிசாசினால் பாதிக்கப்பட்டு, கை மற்றும் கழுத்தில் மந்திரக் கயிறுகளைக் கட்டிக் கொண்டு மிகவும் வேதனையில் இருந்தேன். இந்த வருடம் CBC வகுப்பில் 10 நாட்களும் பங்குபெற்றேன். இறுதிநாளில் என்னைப் பிடித்திருந்த பிசாசுகள் விலகி ஓடியது. மந்திரக் கயிறுகளை அறுத்து எறிந்துவிட்டேன். விடுதலை தந்த கிறிஸ்துவுக்கு நன்றி!

## மத்தியப்பிரதேசம்

**பெயர் : ரசில்லா** **கிராமம் : பணதா**

நான் திக்குவாய் உடையவள் என்பதால் என்னால் நன்றாகப் பேச முடியாது. என்னை எல்லோரும் கேலி செய்வதால், மிகவும் வேதனையடைந்து காணப்படுவேன். CBC வகுப்பில் 10 நாட்களும் பங்குபெற்றதால், எனது திக்கு வாயை வாயை தேவன் திறந்துவிட்டார். இப்பொழுது என்னால் நன்றாகப் பேச முடிகிறது. இயேசுவுக்கே மகிமை!

**பெயர் : ராஜேஷ் புரியா** **கிராமம் : அந்தர்வேலியா**

7ம் வகுப்பு படிக்கும் நான் அதிகமாய் கெட்ட வார்த்தைகள் பேசுவதுடன், மற்ற பிள்ளைகளைப் பயமுறுத்துவேன். நன்றாகப் படிக்கவும் மாட்டேன். 10நாள் CBC வகுப்புகளில் கலந்து கொண்டதால் எனது வாழ்க்கை முற்றிலும் மாற்றிவிட்டது. தற்போது கெட்டவார்த்தைகள் பேசுவதை விட்டுவிட்டேன். இயேசுவுக்கே நன்றி!

## இராஜஸ்தான்

**பெயர் : தீபெக் கட்டாரா**

நான் சிறுவனாக இருக்கும்போது சாராயம் குடிக்கப் பழகி அதற்கு அடிமையாகிவிட்டேன். ஆனால் இந்த வருடம் CBC வகுப்பில் 10 நாட்களும் பங்குபெற்று, அங்கு சொல்லிக் கொடுத்த பாடல்கள், வசனங்கள், கதைகள் மூலம் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் என்னை அடிமைத் தனத்திலிருந்து தேவன் விடுதலை செய்தார். நான் இப்பொழுது குடிப்பழக்கத்தை முற்றிலுமாக விட்டுவிட்டேன். தேவனுக்கே நன்றி!

**பெயர் : அணில் கராசியா** **கிராமம் : ரத்னக்கூட்டா**

எனக்கு தம்பாக்கு சாப்பிடும் வழக்கம் இருந்தது. எனது நண்பர்கள் எனக்கு அறிவுரை கூறியும் நான் எனது சுபாவத்தை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த வருடம் CBC வகுப்பில் 10 நாட்களும் பங்குபெற்றேன். இந்த 10 நாட்களில் எனக்குள் ஒரு மாற்றத்தினை தேவன் தந்தார். தற்போது தம்பாக்கு போடும் வழக்கத்தை நான் முற்றிலுமாக விட்டுவிட்டேன்.

# ஷாலோம் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC) - 2013


பவனி வேளை – ஜெரி, குஜராத்


குழு பயிற்சி – ஹக்வானி, ம.பி.


அபிநயப் பாடல்வேளை – ரூப்சிகூட்டா, இராஜஸ்தான்


நகரேலா கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்


முண்டத் கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்


சொக்வாடா கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்

# ஷாலோம் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC) - இயக்குநர் பயிற்சி - 2013


நகரேலா கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்


முண்டத் கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்


சொக்வாடா கிராம ஆலயத்தின் முன் CBC சிறுவர்கள்

## பீல் ஆதிவாசி மாணவர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்களுக்கான

# குறுகிய கால ஆங்கிலப் பயிற்சி - 2013



ஆராதனையுடன் பயிற்சியினை ஆரம்பிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



பயிற்சியளிக்கும் சகோதரி பியூலா அவர்கள்



பயிற்சியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கும் போதகர்



பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களை வழங்கும் சகோதரி கிறிஸ்டினா பிரின்ஸ் அவர்கள்



பயிற்சியளிக்கும் சகோதரி கிறிஸ்டினா அவர்கள்



பயிற்சியளிக்கும் சகோதரி அனிதா அவர்கள்



பயிற்சி பெற்றவர்கள் சான்றிதழ்களுடன்



# ஷாலோம் குறுகிய கால ஆங்கிலப் பயிற்சி - 2013

நமது பீல் ஆதிவாசி மாணவர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்களுக்கான சிறப்பு குறுகிய கால ஆங்கிலப் பயிற்சி குஜராத்தில் நடைபெற்றது. இதனை Madras Christin College Hr. Sec. School ஐ சார்ந்த திருமதி. அனிதா ரூபன், திருமதி. கிறிஸ்டினா ரத்தாவி, திருமதி. கிறிஸ்டினா பிரின்ஸ் மற்றும் செல்வி. பியூலா, ஆகியோர் குஜராத்தில் நமது பணித்தளத்திற்கு வருகை தந்து நடத்தித் தந்தார்கள். இதனைப் பாராட்டும் விதமாக THE HINDU 09.06.2013 நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது. ஆதாரம் : 09.06.2013 THE HINDU நாளிதழ். தேவனுக்கே மகிமை!

7 ANNANAGAR» THE HINDU • SUNDAY, JUNE 9, 2013

MOGAPPAIR THIRUMANGALAM AMINJIKARAI PADI AMBATTUR

## An English summer

**Four teachers from a city school went beyond the call of duty: they spent the summer in Dahod teaching English to tribal children. LIFFY THOMAS meets the quartet**

The new academic begins on a high note for four city teachers. Christiana Rathnavathy, Anita Ruban, Buella Maria and Christina Prince feel great about having spent the summer vacation on a worthy cause: teaching English grammar to children of the Bhil tribe, at Dahod in Gujarat.

These teachers are excited about the prospect of sharing this summer experience with colleagues and students on June 10, when their school reopens.

Ms. Christiana has photographs and mementoes from the trip. "There is no electricity. These tribal students walk miles to fetch water. But their dedication to study in immense. We had some students who wanted us to take classes even after 7 p.m.," says Ms. Christiana who is volunteering in this manner for the second year.

Shalom, a non-governmental organisation helping members of the tribe get education and health care, had sought volunteers through the MCC school management. Two teachers from the State Board and two from Matriculation campus of the school in Chetpet signed up for the camp.

The 15-day camp set up by the NGO had tribal students of classes X, XI and XII from Rajasthan, Madhya Pradesh and Gujarat. Teaching grammar was a challenge as the students did not know the basics. "We had prepared PPTs to teach them, but that was way too high for them," said Ms. Anita, a teacher of English for high school students. Training in spoken English was accompanied by written tests.

The teachers say the time was too short to make the teaching experience comprehensive. Another compliant was the weather: the Chennai summer had not prepared the four for the heat – 48 degree – that prevailed in Dahod.

But these minor peeves, and the teachers are elated about what they have achieved.

"We were so happy when they gave the vote of thanks in English," said Ms. Christiana.



*Three of the four teachers that took a busman's holiday*

# சுவி. மோகனசுந்தரம் (சுவிசேஷ யாத்திரை ஊழியம், சேலம்) அவர்களின்
# பணித்தள வருகை



அந்தர்வேலியா, ம.பி கிராம சபையில் வரவேற்பு



செய்தி வேளை – அந்தர்வேலியா, ம.பி. கிராம சபை



கும்புரா, இராஜ், கிராம சபையில் வரவேற்பு



செய்தி வேளை – கும்புரா, இராஜ், கிராம சபை



போதகர் கூடுகையில் அன்பளிப்புடன் வரவேற்பு



போதகர் கூடுகையின்போது தேவ செய்தி



முண்டத், ம.பி. கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



பேடவ், இராஜ் கிராம சபை போதகர் குடும்பத்துடன்

# T ¦ jR [ l Tôo û Y A±dûL-
# Ñ®. úUôL ] ÑkRWm (Ñ®úN` Vôj§ û W F ¯Vm, úNXm)

இயேசுவின் நாமம் மகிமைப்படுவதாக! ஷாலோம் மிஷனெரி ஊழியங்களைப் பார்வையிட வேண்டுமென்ற நீண்ட நாள் நினைவை வாய்க்கச் செய்த கர்த்தருக்கே நன்றி! **08.06.2013** அன்று ஷாலோம் பணித்தள அலுவலக ஊழியர் **சகோ. சாமுவேல்** அவர்களுடன் இணைந்து குஜராதிலுள்ள பாரேவா, ஹிரோலா பணித்தளங்களுக்கு நீண்ட பயணமாக பஸ் வசதியோ, சாலை வசதியோ இல்லாமல் ஜீப்பில் கடந்து சென்றோம். அங்கு ஊழியர் குடும்பங்களைச் சந்தித்து, ஜெபித்தபோது ஆவியானவர் ஏவுதலால் சில காரியங்களைச் சொல்லி ஜெபித்து, என்னுடைய சாட்சியை பகிர்ந்து கொண்டேன். அங்கிருந்து குஜராத், கொலானா பணித்தளத்திற்குச் சென்றபோது 30க்கும் அதிகமான ஆதிவாசி மக்கள் எங்களுக்காகக் காத்திருந்தனர். ஆலயத்தில் தேவ செய்தியினையும், எனது சாட்சியையும் பகிர்ந்து கொண்டது எல்லோருக்கும் பிரயோஜனமாக இருந்தது.

**09.06.2013** அன்று ஞாயிற்றுக்கிழமை மத்தியப்பிரதேசத்தில் உள்ள அந்தர்வேலியா கிராம பணித்தளத்திற்கு **சகோ. ஜெபயராஜ்** அவர்களுடன் இணைந்து சென்றேன். அங்குள்ள ஆலயத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட பீல் மக்கள் ஆவியோடும் உண்மையோடும் உற்சாகமாக கர்த்தரை ஆராதித்தனர். நான் எனது சாட்சியினைக் கூற **சகோ. ஜெயராஜ்** அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். அதன்பின் அங்கிருந்து முண்டத் என்ற கிராம சபைக்குச் சென்றோம். மின் வசதியில்லாத அந்த ஆலயத்திலும் 250க்கும் அதிகமானோர் கூடி ஆண்டவரை ஆராதித்தனர். ஆராதனையின் முடிவில் ஒவ்வொருவருக்காகவும், தலையில் கை வைத்து ஜெபித்தபோது ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்தார்.

**10.06.2013** அன்று காலை 9 மணிக்கு தாகோதிலுள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் மரியாள் விலையேறப்பெற்ற தைலத்தை ஆண்டவருடைய சிரசில் ஊற்றினதைக் குறித்து விளக்கிக் கூறியது, அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் பிரயோஜனமாக இருந்தது.

அதன்பின் **சகோ. திவாகர்** அவர்கள் ஜெரி, (குஜராத்) பணித்தளத்திற்குச் அழைத்துச் சென்றார். அன்று மதியம் மத்தியப்பிரதேசதில் சுமார் 250 தேவ ஊழியர்கள் கலந்து கொண்ட ஊழியர் கூடுகையில் கர்த்தர் நம்மை உயர்த்துவார் என்கிற தலைப்பில் தேவ செய்தியினையும், எனது சாட்சியினையும் பகிர்ந்து கொண்டதை **சகோ. கேரட்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். அதன் பின் என்னுடைய சாட்சிப் புத்தகம் 1000 பிரதிகள் ஷாலோம் ஊழியங்குளுக்காக வழங்கப்பட்டன.

**11.06.2013** அன்று **சகோ. கேரட்** அவர்கள் ராஜஸ்தான் பணித்தளத்திற்கு அழைத்துச் சென்றார். கும்புரா என்ற கிராம சபையில் மதியம் ஆராதனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேடவ் என்கிற கிராமத்தில் ஊழியர் கூடுகைக்காக கட்டப்பட்டு வரும் ஆலய கட்டிடத்திற்காகவும், அதன் தேவைகளுக்காகவும், ஜெபித்தோம்.

மேற்கண்ட பணித்தளப் பார்வையின் மூலம் கர்த்தர் பல காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். நான் சந்தித்த எல்லா கிராமங்களிலும் சரியான சாலை, பஸ், மின்சாரம் போன்ற எந்த வசதியும் இல்லை. பீல் மக்கள் மத்தியில் கர்த்தர் வல்லமையாக கிரியை செய்து வருகிறார். தமிழகத்திலுள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் ஷாலோம் ஊழியர்களுக்காக ஜெபித்து, நம்மால் இயன்ற உதவிகளைச் செய்தால், இந்த தலைமுறையிலேயே பீல் மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தர்தாமே ஷாலோம் ஊழியங்களையும், **பிஷப் தேவதாஸ்** குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

- தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 30 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

- இந்த புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களை தேவன் ஆசீர்வதித்து ஞானத்தினால் நிரப்பவும், மேற்படிப்பிற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல வழி வாசல்களைத் திறக்கவும் ஜெபியுங்கள். மேலும் இந்த பீல் ஆதிவாசி சிறுவர்களின் படிப்பிற்கான இந்த வருடத் தேவைகள் **ரூ. 6 இலட்சங்கள்** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

- குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவப் பிள்ளைகளை தேவன் கொண்டுவரும்படியாக ஜெபியுங்கள்.

- பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் பங்குபெற்று அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.

- **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

- 23 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நமது ஷாலோம் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும், இந்த புதிய ஆண்டில் தேவன் புதிய திட்டங்களையும் தரிசனங்களையும் தந்து ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். மேலும் இந்த ஆண்டில் பணித்தளங்களில் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் தேவன் நடத்தி அநேக ஆத்துமாக்களை இரட்சிக்கவும் ஜெபியுங்கள்.

- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்களுக்காகவும் குஜராத், பணித்தள அலுவலக ஊழியர்களுக்காகவும், மற்றும் சென்னை, மார்தாண்டம் கிளை அலுவலக ஊழியர்களுக்காகவும் அவர்களின் குடும்ப பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

## அன்பார்ந்த ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில், ஷாலோம் ஊழியங்கள் மூலமாக தேவன் இன்று பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். தூத்துக்குடியில் செயல்பட்டுவரும் நமது ஷாலோம் தலைமை அலுவலகத்திலும் தேவன் தமது கிருபையினைத் தந்து ஊழியங்களை நிறைவேற்றி வருகிறார்.

இங்கு கணக்குகள், ஆதரவாளர் முகவரிகள் மற்றும் விபரங்கள் போன்ற அனைத்துக் காரியங்களும் தனித்தனி கணிணி மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அனைத்துக் காரியங்களையும், ஒரே Software மூலம் செயல்படுத்தலாம் என ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம். இது ஊழியக் காரியங்களை விரைவாகவும் சிறப்பாகவும் செய்ய ஏதுவாக இருக்கும்.


மேலும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலருக்கான முகவரிகள் அனைத்தும், புதிய Software மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டு, அதன் மூலம் இந்த மாத இதழினை உங்களுக்கு அனுப்பியுள்ளோம். ஆகையால் தங்களது முகவரியில் ஏதாவது **பிழைகள் இருந்தாலோ, ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் வந்தாலோ, வேறு நபருடைய பெயரில் வந்திருந்தாலோ** எங்களுக்கு உடனடியாக தெரியப்படுத்த அன்பாயக் கேட்கிறோம். **பத்திரிகை, முகவரி, காணிக்கை** போன்ற விபரங்களை **கடிதம் மூலமாகவோ, போன் மூலமாகவோ, S.M.S. மூலமாகவோ, E-mail. மூலமாகவோ** எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

எங்களது முகவரி: **SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. Tamil Nadu. Phone: 0461 - 2375468, **Cell : 9345675468** E-mail : info@shalommission.in

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 4

**பதில் எழுதுக :**

1. ரெகோபோத் என்றால் என்ன?
2. வழியில் கிடக்கிற சர்ப்பத்தை போல் இருப்பவன் யார்?
3. மோசே கன்மலையை கோலினால் அடித்தது எங்கெங்கே?
4. பேயோரின் அக்கிரமம் நமக்கு போதாதா? அந்த அக்கிரமம் எது?
5. இடது கை பழக்கமுள்ள நியாயாதிபதி யார்?
6. இறையின் மேல் பாய்கிற கழுகைப் போல கடந்து போகிறது எது?
7. கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்பவர் யார்?
8. எவன் தேவனுடைய ராஜ்ஜியத்துக்கு தகுதி உள்ளவன் அல்ல?
9. ஊழியத்தில் பவுலுக்கு பிரயோஜன–முள்ளவன் யார்?
10. யார் சாபத்தின் பிள்ளைகள்?

**நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.07.2013**
6. வேதவினா போட்டியில் பங்குபெறுவோர் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரின் சந்தா எண்ணைக் குறிப்பிட அன்பாய் கேட்கிறோம்.

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. பெரோயா பட்டணத்தார் (அப். 17 : 10,11)
2. யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனிடம் (ஆதி. 40 :14&9 )
3. கர்த்தருடைய கிருபையே (புல. 3 : 22)
4. யோபு (யோபு 14:14)
5. வேலை செய்கிறவன் (பிரசங்கி 5:12)
6. மனைவிக்கு (யோபு 19:17)
7. எல்மா (மாயவித்தைக்காரன்) (அப். 13:8–10)
8. ஆபிரகாம் லோத்திடம் (ஆதி. 13:8,9)
9. இருதயத்தின் நினைவுகள் (நியா. 5:15)
10. உத்தமர்களுக்கு (நீதி. 10:29)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 3–ல் சரியான விடையினை சரியான நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 24 பேர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. சகோதரி. சொரூபராணி,** சங்கரன் கோயில். **2. சகோதரி. நான்சி செலியன்,** சென்னை.

**3. சகோதரி. ரத்னமணி,** சிவகாசி.

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,

**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# தூய யோவான் ஸ்நானகன் மேல்நிலைப் பள்ளி, புதியம்புத்தூர்

நன்றாக படர்ந்து வளர்ந்த ஆல மரங்களும் இனிமையான, சுவையான தண்ணீருள்ள சுனையும் அமைந்த இடம் தான் புதியம்புத்தூர். மாடுகளில் பொதி அமர்த்தி வாணிபம் செய்த செல்வந்தர்கள் இங்குதான் தங்கி தாபரித்து தம் தொழிலைச் செய்து வந்தனர். ஆகையால் இந்த ஊருக்கு முதலில் பொதி அமர்த்தூர் என்ற காரணப் பெயருண்டு. நாள் செல்லச் செல்ல அப்பெயர் மருவி புதியம்புத்தூர் என்று வழங்கலாயிற்று. 1930ல் **ரேனியஸ் ஐயரவர்கள்** ஆரம்பப்பள்ளியைத் தொடங்கி புதியம்புத்தூரில் கல்விக்கு வித்திட்டார். அருள்திரு. **J.F.கேர்ன்ஸ் ஐயர்** 1856 ல் பள்ளிக்கூட ஊழியத்தில் அதிக கவனம் செலுத்தினார். **அருள் திரு. பீட்டர்** அவர்களின் காலத்தில் புதியம்புத்தூர் ஆரம்பப் பள்ளி 1922 ல் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. அருள்திரு. **A. ஞானசிந்தாமணி** அவர்கள் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட கடும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 1961ல் **ஜெபராஜ் பேராயர்** அவர்கள் யோவான் ஸ்நானகன் உயர்நிலைப் பள்ளியை அரம்பித்து வைத்தார்கள். 1962ல் முதல் முதலாக 10வது வகுப்பில் 40 மாணவர்கள் அரசு தேர்வு எழுதினார்கள். 1966ம் ஆண்டு ஆரம்பப் பள்ளிக்கென்று ஒரு புதுக் கட்டிடம் கட்டப்பட்டு புது இடத்திற்கு மாற்றப்பட்டது.

**திரு. ஜோசுவா சாமுவேல்** அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த போது மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக K.N.H(ஆதரவற்ற மற்றும் ஏழை மாணவர்கள் இலவசமாக தங்கிப்படிக்க) விடுதி ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிக்கூட வளாகத்தில் சாலை ஓரத்தில் 8 கடைகள் 1985 ம் ஆண்டு கட்டப்பட்டு நிரந்தர வருமானம் வாடகைப் பணமாக பள்ளிக்கு கிடைக்கும்படி செய்தார்கள். 1988ல் **திரு. டேனியல் சிகாமணி சிமியோன்** தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றபின் பள்ளி பல விதத்திலும் வளர்ச்சியைக் கண்டது. புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் **அருட்பெருந்திரு. ஜேசன் தர்மராஜ்** பேராயர் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டன. உயர்நிலைப் பள்ளி மேல் நிலைப் பள்ளியாக உயர்வுப் பெற்றது, 1996 ம் ஆண்டு 1200 மாணவ மாணவிகள் பயிலும் இடமாக திகழ்ந்தது. அதே ஆண்டில் 10 ம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சிப் பெற்று அரிய சாதனையைப் படைத்தது.

**திரு. டேவிட் பால்ராஜ்** தலைமை ஆசிரியர் காலத்தில் New Millennium Block 2000 ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதற்குபின் வந்த தலைமை ஆசிரியர்கள் **திரு. எல்மர் எப்ராயீம்** New Millennium upstairs Block ஐயும், **திரு. குணசேகரன்** **Rev.J.F Kerns Memorial** Block ஐயும் கட்டி முடித்து பள்ளியை முதல் நிலைக்கு உயர்த்தினர். மேலும் **திரு. A.குணசேகரன்** தலைமையாசிரியராக இருந்த போது பள்ளிக்கு ஓர் சிற்றாலயம் கட்டப்பட்டு 2010 ல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1830 ஆம் ஆண்டு ரேனியஸ் ஐயரவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பள்ளி, இப்போது தென் தமிழகத்தில் தலைசிறந்த கிராம மேல்நிலைப் பள்ளியாக 1721 மாணவ–மாணவியர்களையும், 35 ஆசிரியர்கள், 7 அலுவலகப் பணியாளர்களையும் கொண்டு சிறப்புடன் விளங்குகின்றது. இவ்வட்டாரத்து செல்வந்தர் பழைய மாணவ மாணவியர், ஆசிரியப் பெருந்தகைகள், தலைமை ஆசிரியர்கள் எல்லாரும் ஒருங்கிணைந்து பள்ளியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து தியாகம் செய்து இயேசுவின் மகிமையைப் பறைசாற்றும் கல்விக்கூடமாக திகழச் செய்துள்ளனர். **தேவனுக்கே மகிமையுண்டாவதாக.**

## பீல் ஆதிவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்வியறிவு பணிக்கான மிக அவசரத் தேவை

தேவ கிருபையால் சுமார் 500 பீல் சுதேச ஊழியர்களையும், பல்லாயிரம் விசுவாசக் குடும்பங்களையும் தேவன் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் தந்துள்ளார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட இவர்களின் பிள்ளைகளின் படிப்பு மிகப் பெரிய தேவை நிறைந்த சவாலாகவே உள்ளது.

- ❖ சில கிராமங்களில் இன்னும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கூட கிடையாது. மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் சரியாக செயல்படுவதில்லை.
- ❖ நடுநிலைப் பள்ளிகளுக்கு (8ம் வகுப்பு வரை) செல்ல வேண்டுமானால் மாணவர்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்தே செல்ல வேண்டும்.
- ❖ உயர்நிலைப் பள்ளிகள் குறிப்பாக 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு படிக்க ஒவ்வொரு தாலுகாவிலும் குறைந்த பள்ளிகளே உள்ளன. விடுதி வசதிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. அநேகர் வசதியின்றி படிப்பதை நிறுத்தி விடுவார்கள்.
- ❖ கிராமங்களில் மின்சார வசதியும், சரியான Tuition வசதியும் கிடையாது. குடிகாரர்கள் நிறைந்த கிராமங்கள் உள்ளன. மேலும் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை முற்றிலும் கிடையாது.
- ❖ வெளியிடங்களுக்குச் சென்று நல்லப் பள்ளிக் கூடங்களில் படிப்பினை பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் இருந்தாலும், பொருளாதார வசதிகள் அவர்களுக்குக் கிடையாது.
- ❖ விசுவாசிகள், மற்றும் ஊழியர்களின் பிள்ளைகள் நன்கு படித்து முன்னேற வாஞ்சையுடன் இருப்பதால், அவர்களுக்கு வழிகாட்டவும், உதவி செய்யவும் ஜெபித்து கரம் கொடுத்துத் தாங்குவோர் தேவை.
- ❖ ஆதிவாசி மாணவர்கள் 80% மதிப்பெண்கள் பெற்றுவிட்டால் உயர்கல்வி மற்றும் ஆசிரியர், செவிலியர், கம்ப்யூட்டர் பயிற்சி போன்ற துறைகளில் இலகுவாக இடங்கள் கிடைத்துவிடும்.
- ❖ அப்படி இடம் கிடைத்தாலும் பொருளாதாரத்தில் கஷ்டப்படும் இவர்களுக்கு சில வருடங்கள் நிதி உதவி செய்து படிக்க வைத்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கும் சபைக்கும் மட்டுமல்ல தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமைவார்கள்.

200 வருடங்களுக்கும் முன்பாக நம்மை தேடி தமிழ்நாட்டிற்கு தேவன் அனுப்பிவைத்த மிஷனெரிமார்கள் கட்டியெழுப்பின தேவ ஆலயங்கள் மட்டுமல்ல எத்தனையோ கல்விக் கூடங்களை கட்டியெழுப்பி, கல்லூரிகளையும், தொழில் நுட்பக் கல்லூரிகளையும் மருத்துவ மனைகளையும் கட்டித் தந்து நம்மை ஆசீர்வாதமான சந்ததியாக உருவாக்கியதை நாம் மறக்க இயலாது. இன்று நம் தலைமுறையில் நம் கண்கள் காண பல்லாயிர பீல் ஆதிவாசிக் குடும்பங்களில் மாணவச் செல்வங்களுண்டு, நாமும் அந்த மாணவர்களை ஜெபித்துத் தாங்க கடமைப்பட்டுள்ளோம் அல்லவா !

தேவ கிருபையால் **Sharing Love Mission** மிஷனெரிப் பணியின் சார்புப் பணியாக உருவாக்கியுள்ள **Shalom Charity Mission** மூலமாக கல்வி, மருத்துவம் மற்றும் முன்னேற்றப் பணிகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். இது வரையில் 947 மாணவர்கள் ஷாலோம் பள்ளி, விடுதி மற்றும் நேரடியான கல்விப் பணிக்கான நிதி உதவிகளைப் பெற்று வருகிறார்கள்.

**BLESS A CHILD திட்டம்**

**"Bless a Child"** திட்டத்தின் மூலமாக ஒரு பீல் ஆதிவாசி மாணவரை ரூ. 600 அல்லது அதிகமாகவும் ஜெபித்துக் கொடுத்துத் தாங்கும் ஆதரவாளர்கள் இவ்வருடத்தில் 300 பேர்கள் தேவை. நீங்கள் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளும் போது தாங்கும் அதிவாசி மாணவரைப் பற்றிய விவரம், சாட்சி, புகைப்படங்களை உடனடியாக உங்களுக்கு அனுப்பி வைப்பதுடன், வருடம் 2 முறை நீங்கள் ஜெபித்துத் தாங்கும் மாணவரின் கடிதம் மற்றும் மாணவரின் முன்னேற்ற அறிக்கைகளையும் அனுப்பி வைப்போம்.

**கல்விப் பணிக்கான பிற தேவைகள் (1–8 வகுப்பு வரை)**

அவ்வாறு தாங்கப்படும் மாணவர்களில் (குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள்) 1 முதல் 8 வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்வியாண்டின் ஆரம்ப கட்டத்தில் சீருடை, பத்தகங்கள், பேக், நோட்டுப் புத்தகங்கள் போன்றவற்றை சுமார் 947 பிள்ளைகளுக்கும் வாங்கிக் கொடுப்பதற்கு குறைந்தது ரூ. 6 இலட்சங்கள் தேவைப்படுகிறது. ஆதிவாசி மாணவரைத் தாங்குவோர், சுதேச ஊழியர்களை தாங்குவோர் மாத ஆதரவுடன் ஒரு மாணவருக்கு ரூ. 500 அல்லது அதற்கு அதிகமாகவும் அனுப்பினால் உதவியாய் இருக்கும். மற்றவர்கள் இந்த தேவையில் ஒரு பங்கினை அனுப்பி ஆதிவாசி மாணவரின் கல்வித் தேவைகளை சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்தி தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிக மிக அவசரமாக தேவைப்படும் உயர் கல்விக்கான நிதி உதவி (10th, 12th மற்றும் கல்லூரி)**

நாம் தாங்கி வரும் 947 பிள்ளைகளில் பலருக்கு ஜெபித்து மாத உதவி தரும் ஆதரவாளர்கள் மூலம் மாதாந்திர தேவைகள் மட்டும் சந்திக்கப்படுகிறது. இவர்களில் சிலர் நல்ல மிஷன் பள்ளிகளில் "English Medium" படித்து வருகிறார்கள் இவர்களுக்கு குறைந்தது, ரூ. 10,000 ஒவ்வொரு வருடமும் செலவழிக்க வேண்டியுள்ளது.

மேலும் 10,11,12 ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் கிராமங்களிலிருந்து உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காக நகர்ப்புறங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. அங்கு போதிய விடுதி வசதியில்லாதபடியால், தனி அறைகளை வாடகைக்கு எடுத்து சாப்பாடு செய்து, உண்டு, படிக்க வேண்டிய சூழ்நிலைகள் உள்ளது. அநேக மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை எடுக்க சிறப்பு டியூசன் படிக்கிறார்கள். இவர்களுக்கு வருடம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்களுக்கு, கல்லூரி படிப்பு வரை தேவைப்படுகிறது.

மேலும் சிலர் +2 முடித்து ஆசிரியர், செவிலியர் மற்றும் கம்யூட்டர் போன்றவற்றில் சேரவும், B.Sc., B.A., போன்ற பட்டங்களைப் பெற உயர் படிப்பிற்கு ஆயத்தமாகியும் வருகிறார்கள். இவர்களுக்கு வருடத்திற்கு ரூ.30,000 வீதம் 3 வருடத்திற்கு உதவித் தொகை தேவைப்படுகிறது. இவர்களுக்கு முழுமையாகவோ, பகுதியாகவோ, நிதி உதவியை சபையாகவோ, குடும்பமாகவோ தாங்க முன்வர அன்புடன் அழைக்கிறோம்.

இம் மாணவர்கள் படித்து நல்ல வேலைக்கு வந்தப்பின் அவர்கள் குடும்பத்திற்கு ஆசீர்வாதமாகவும், சபைக்கு தசம பாகம் தந்து உதவுகிறவர்களாகவும், தேசத்திற்கு ஆசீர்வாதமுள்ளவர்களாகவும் விளங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜெபத்துடன் பங்கு பெற்று உங்கள் சந்ததியின் மேல் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## உன்னதமான இந்த ஆதிவாசி சிறுவர் கல்விப் பணியில் ஜெபித்துப் பங்குபெற்று, தேவாசீர்வாதம் பெறுங்கள் !

- ❖ வருடத்திற்கு ரூ. 30,000 கொடுத்து ஒரு ஆதிவாசி மாணவரின் உயர்நிலைப் பள்ளிக்கூடம் மற்றும் கல்லூரி 3 வருடம் பயில உதவி செய்யும் ஆதரவாளர்கள் 50 பேர் தேவை.
- ❖ வருடத்திற்கு ரூ. 20,000 ஜெபித்து தந்து ஆதிவாசி மாணவரின் உயர்நிலைப் பள்ளிக்கூட மற்றும் கல்லூரிப் படிப்பிற்கு 5 வருடங்கள் பொறுப்பெடுக்கும் 160 ஆதரவாளர்கள் தேவை.
- ❖ English Medium School (1–8 வகுப்பு) மற்றும் Mission School Hostel-ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ. 10,000 வருடத்திற்குத் தேவைப்படுகிறது. ஜெபித்துக் கொடுத்துத் தாங்கும் ஆதரவாளர்கள் சுமார் 100 பேர்கள் தேவை.
- ❖ Bless a Child திட்டத்தின் மூலம் ஒரு மாணவருக்கு மாதம் ரூ. 600/– கொடுத்து, ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் தேவை.

---

**இத்திட்டத்தை உங்கள் உறவினர்கள், நண்பர்கள் மேலும் சபையாருக்கு அறிவித்து கரம் கொடுத்து ஜெபித்து உதவ உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

**நிதி உதவி அனுப்பும் போது SHALOM CHARITY MISSION என்ற பெயரில் Tuticorin Branch க்கு D.D. or Cheque அனுப்பி வைக்கலாம்.**

**மேலும் காணிக்கைகளை தலைமை அலுவலகத்திலோ, முன்னேற்றப் பணியாளர்களிடமோ, பிரதிநிதிகளிடமோ கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**நிதி உதவி பெற்றவுடம் நீங்கள் தாங்கும் மாணவரின் விவரங்கள், புகைப்படம் மற்றும் மாணவரின் நன்றிக் கடிதத்தை உடனடியாக அனுப்பி வைப்போம்.**

---

மொத்தம் **947** பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகளை நாம் தாங்கி வருகிறோம். பிள்ளைகள் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள்.

| | |
|---|---|
| ஆதரவாளர்களால் தாங்கப்படும் மாணவர்கள் | 784 |
| ஆதரவாளர்கள் தேவைப்படும் மாணவர்கள் | 163 |

| நமது பீல் ஆதிவாசி மாணவர்களில் உயர்கல்வி பயில்வோர் விபரம் | | | | |
|---|---|---|---|---|
| கல்லூரி | 12 th | 11 th | 10 th | மொத்தம் |
| **49** | **38** | **41** | **78** | **206** |

163 Uô Q YoL Þd Ï UôRm ì .600/- ùLôÓ j Õ ù_©j Õ j Rô e Ïm B RWYô [ oL s úRû Y!

---

வங்கிக் கணக்கு : SHALOM CHARITY MISSION (Tuticorin Branch)
Axis வங்கிக் கணக்கு எண்: 105010100096779 (IFS Code : UTIB0000105)
TMB வங்கிக் கணக்கு எண்: 174100710400061 (IFS Code : TMBL0000174)



# SHALOM SHORT TERM ENGLISH COACHING CLASS - 2013

ஆண்டவரின் பெரிதான கிருபையால் இந்த வருடமும் Madras Christian College Hr. Sec. School மற்றும் Matriculation School ன் உதவியுடன் நமது பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கும், Field Staff மற்றும் Compassion Project Staff –களுக்கும் English Coaching Class மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் Madras Christian College Hr. Sec. School ல் கடந்த வருடம் போல் இந்த வருடமும் **திருமதி. அனிதா ரூபன்** மற்றும் **திருமதி. கிறிஸ்டினா ரத்தாவி** ஆகியோரும் Madras Christian college Matriculation School ல் புதிதாக **திருமதி. கிறிஸ்டினா பிரின்ஸ்** மற்றும் **செல்வி. பியூலா** அவர்களும் வந்து நடத்தினார்கள். ஏப்ரல் 29ம் தேதியிலிருந்து மே 4ம் தேதி வரை ஒரு வாரம் சரியாக நடைபெற்றது. கடந்த வருடம் பங்கு கொண்டவர்களில் Office Staff, Senior Pastors மற்றும் Compassion Staff ஆகியோர் என 47 பேர் பங்கு கொண்டு 2 nd grade course படித்தார்கள்.

10 வது முதல் கல்லூரி வரை படிக்கும் பீல் ஆதிவாசி மாணவர்கள் 79 பேர் 1st grade course படிக்கும்படியாய் பங்கு கொண்டனர். இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக ஆங்கில வகுப்புகள் நடைபெற்றது. மே மாதத்தின் 45 டிகிரி வெயிலிலும் வந்திருந்த 4 ஆசிரியைகளும் களைப்படையாமல் காலை 8.30 மணியிலிருந்து மாலை 7.00 மணி வரை பாடம் நடத்தினார்கள். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளின் தரம் உயர வேண்டும் என்ற ஷாலோம் ஊழியத் திட்டத்தில் M.C.C School ஆசிரியைகளின் பங்கு மிகவும் பெரியது. இந்த மாபெரும் பரம அழைப்பின் தரிசனத்தில் பங்கு கொண்ட அவர்களையும், அவர்கள் குடும்பங்களையும், தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் ஆசீர்வதிப்பார்.

தமிழ் நாட்டிலுள்ள சென்னை வாழ் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் நடத்தின இவர்கள், ஆதிவாசி கிராமத்தில் படிப்பறிவு இல்லாத பெற்றோருக்கு பிறந்த கிராமங்களின் பள்ளியில் படித்த மாணவர்களின் தரத்திற்கு இறங்கி வந்து பொறுமையுடன் ஆங்கிலம் கற்றுக் கொடுத்தவிதம் மிகவும் பாராட்டத்தக்கது. பங்கு கொண்டவர்களின் கவனம் சிதறாமலிருக்க LCD Projector மூலமாக வண்ணப்படங்களைக் காண்பித்து, எளிதில் பதியும்படி மே 2ம் தேதி வியாழன் இரவு நடத்தப்பட்டது. பாடல், நடனம், குறுநாடகம் என ஆதிவாசி மாணவர்கள் மிகவும் நேர்த்தியாக செய்தனர். ஒவ்வொரு நாளும் மாலையில் இரண்டு வகுப்பாக நடைபெற்றதை ஒன்றாக்கி செய்கையுடன் ஆங்கிலப் பல்லவியைக் கற்றுக் கொடுத்தனர். 4ம் தேதி சனிக்கிழமை கற்றுக் கொடுத்த பாடத்திலிருந்து தேர்வு வைக்கப்பட்டு முதல் மூன்று இடம் வந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதோடு பயிற்சி பெற்ற 126 பேருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் யாவருக்கும் ஒரு வாரம் மொழிப் பெயர்ப்பாளர்களாக **Mr.Garret Devadasan, Mrs. Sharon Devadasan** மற்றும் **Mr.Wallace** அவர்கள் செயல்பட்டனர். M.C.C School ஆசிரியைகளுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். தேவன் தாமே அவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. கோர்சிங் R. டாமோர்** **புரக்குவா**

வயிறு வலியால் கஷ்டப்பட்டு வந்த மேத்தாணி என்ற சகோதரிக்கு ஜெபித்தவுடன் தேவன் வேதனையை மாற்றினார்.

ரமேஷ் என்ற சகோதரி வியாதியால் ஒரு வருடமாக கஷ்டப்பட்டு, மருந்துகள் சாப்பிட்டும் வியாதி நீங்காமல் இறுதியில் நம் ஊழியரிடம் எண்ணெய் பூசி ஜெபிக்கவே தேவன் பூரண சுகம் தந்தார்

**Pr. பச்சு பாரியா** **ராசராடா**

பல வருடங்களாக வேலையில்லாமல் அவதிப்பட்டு வந்த ஹீக்கிபேன் என்ற சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் வேலையைக் கொடுத்தார்

கால் வலியினால் கஷ்டப்பட்ட மாலிபேன் என்ற சகோதரிக்கு ஜெபத்தினால் தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. பச்சு N. ரட்டுவா** **குன்னாடா**

கரம்சிங் பாய் என்ற சகோதரருக்கு இரவு நேரத்தில் பயங்கர வாந்தி ஏற்பட்டு நீண்ட நேர அவதிக்குப்பிறகு ஜெப எண்ணெயை குடித்து ஜெபித்த பிறகு வாந்தி நின்றது.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**சகோ. வால்சிங் M. சாரல்** **ஹக்வானி**

சுசுவா என்பவர் வேலைப் பார்க்கும் இடத்திலிருந்து கீழே விழுந்து விட்டார். அருகில் Machines ஓடிக் கொண்டிருந்தாலும் எந்த விபத்தும் ஏற்படாமல் தேவன் அற்புதமாய் பாதுகாத்தார்.

**Pr. விஜய் K. டாமோர்** **குஜார்பாடா**

கமலிபேன் என்பவருக்கும், காளிபேன் என்பவருக்கும் தலைவலியிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார்.

**Pr. விரேந்திர K. டாமோர்** **சஜலி**

காய்ச்சலினால் கஷ்டப்பட்டு வந்த காருபாய்க்கு தேவன் அற்புத சுகம் தந்தார்

**Pr. கராக்கியா T. டாமோர்** **குஜார்பாடா**

இடுப்பு வலியினால் பல மாதங்கள் கஷ்டப்பட்டு வந்த காளிபேன் சகோதரிக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

தலைச்சுற்று ஏற்பட்டு அவதிப்பட்ட சத்தூரிபேன் என்பவருக்காக ஜெபித்த போது பூரண சுகம் கிடைத்தது.

சுய நினைவை இழந்த மடியாபாய் என்பவருக்காக ஜெபித்த போது நல்ல சுகம் பெற்று சுய நினைவுக்குத் திரும்பினார்.

**Pr. பார்த்து R. டின்டோர்** **போர்குண்டா**

வயிற்று வலியால் அவதிப்பட்ட ரமேஷ் சகோதரர் மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் ஜெபித்த போது கர்த்தர் பூரண குணம் கொடுத்தார்.

**Pr. பாடர் பாரியா** **கோய்கா**

கேன்சர் வியாதியினால் சிரமப்பட்டு பல வைத்தியம் செய்தும் குணமடையாமல் மரிக்கும் தருவாயில் இருந்த போது, இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. பக்குல் சந்திர K. காடா** **பிச்சாவாடா**

கம்னி என்ற சகோதரிக்கு வேலை செய்கின்ற போது பாம்பு கடித்துவிட்டது. ஆலயம் வந்து ஜெபித்த போது தேவன் சுகம் தந்தார்.

சுரேஷ் என்பவரின் மகளுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டு கஷ்டப்பட்ட போது தேவன் சுகம் தந்தார்.

சகோ. பாதர் என்பவரின் மகளுக்கு ஜெபித்த போது கழுத்திலிருந்த கட்டி மாறியது.

**Pr. தேஜ்ஜு கோமல்** **பாட்வாலா**

காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட சகோ. மகோத் என்பவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

கை வேதனையினால் கஷ்டப்பட்டுவந்த தாவூத் என்ற சிறுவனுக்காக ஜெபித்தபோது வேதனை மாறியது.

**Pr. வால்சிங் சோகரியா** **சுலியா**

வாஜ்ஹிஸ் என்பவரின் மகன் விஷம் குடித்து உயிருக்குப் போராடிய நிலையில் ஜெபித்த போது தேவன் ஆபத்திலிருந்து காப்பாற்றி உயிர் பிழைக்கச் செய்தார்.


## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
**13.07.2013,**
**சனிக்கிழமை**


நேரம்
**மாலை 5.00 மணி முதல்**
**7.00 மணி வரை**

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்,
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 2 தீமோ 4:7



## *வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்.....*

பெயர் : **சகோ. ஜெயபால்**

பிறப்பு : **27.03.1950**, இறப்பு : **18.05.2013**
வயது : **63**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், கடந்த பல ஆண்டுகளாக நமது ஷாலோம் ஊழியத்தில் பிரதிநிதியாக, அம்பை பகுதியில் செயல்பட்டு வந்த **சகோ. ஜெயபால்** அவர்கள் 18.05.2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

இவரது மனைவி சகோதரி மேரி அவர்களுக்காகவும், மூன்று பிள்ளைகள் மற்றும் மருமக்கள் பேரப் பிள்ளைகள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். தேவன்தாமே அவர்கள் அனைவருக்கும் நல்ல ஆறுதலையும் தேறுதலையும் தருவாராக!

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் | நேரம் |
|---|---|
| **20.07.2013 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 11.59 மணி வரை (24 மணிநேரம்)** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

## Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓûL

| | |
|---|---|
| நாள் : **01.07.2013 (திங்கள்)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

---

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

இந்தியாவில் வெயில் தாக்கத்தினாலும் வெப்பக்காற்றினாலும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு இந்திய மாநிலங்களில் 45 டிகிரிக்கும் அதிகமாக வெயில் சுட்டெரிக்கின்றது. இதனால் அநேகரின் உடலில் நீர்ச்சத்துக் குறைந்தும், அநேகர் வெப்பக் காற்றினால் பாதிக்கப்பட்டு பல்வேறு உடல் பாதிப்புகளினாலும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 10.06.2013 அன்று மும்பையிலுள்ள 5 மாடிக்கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து தரைமட்டமானது. இதில் அநேகர் கொல்லப்பட்டனர். மேலும் 6பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் கட்டிடப் பணிகளில் உள்ள குறைபாடுகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

உலகில் 5 வயதிற்கு முன்பாக இறக்கும் குழந்தைகளில் கிட்டத்தட்ட பாதிப்பேர் போஷாக்கின்மையாலேயே இறப்பதாக மருத்துவ சஞ்சிகையான லான்செட்டில் வெளியான ஆய்வு ஒன்று கூறியுள்ளது. அத்துடன் இந்த இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. பெரும்பாலாக இப்படிப்பட்ட இறப்புகள் ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய கண்டங்களிலேயே நடக்கின்றன.

தானாகவே சுயாதீனமாக இயங்கி போர்க்களங்களில் தாக்குதல் நடத்தும் இயந்திர மனிதனான கில்லர் ரோபோக்களைக் குறித்த அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில் ஆராய்கின்றது. இதில் முன்னதாகவே உத்தரவுகளை ஃபுரோகிராம் செய்துவிட்டால், இந்த இயந்திரம் தானாகவே சென்று ஆட்களை அழிக்கும் அல்லது இலக்குகளைத் தாக்கும். ஆளில்லா விமானங்களைப் போலல்லாது, இந்த இயந்திர மனிதனை போர்க்களத்தில் இறக்கிவிட்டால் அதன்பின் மனிதர்கள் கட்டுப்படுத்தத் தேவையில்லை, அது தானாகவே செயல்படும்.

நன்றி : www.bbc.co.uk


## எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

ஷாலோம் கிராம ஆலயம்



# ரூபாகேடா மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசத்தில் மேக்நகர் தாலுகாவில் ஜாபுவா மாவட்டத்தில் அமைந்துள்ளது– தான் ரூபாகேடா கிராமமாகும். இங்குள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்படாமல், பாவத்திலும் சாபத்திலும் பிசாசின் பிடிகளிலும் வாழ்ந்து வந்தனர். மேலும் இந்த ஜனங்கள் இறந்தவர்களின் ஆவிகளையும், துர் தேவதைகளையும் வணங்குபவர்கள். இதனால் கிராமம் முழுவதும் அந்தகாரமாகவே காணப்படும். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. சோம்லா புரியா.

இவரது குடும்பம் முழுவதும் பிசாசின் பிடியில் சிக்கி மிகவும் கஷ்டப்பட்டு வந்தது. இவர்கள் ஜீவனத்திற்காக வளர்த்து வந்த பசு மாடும் நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருவாய்க்குச் சென்றது. இப்படிப்பட்டதான இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர் இந்தக் குடும்பத்தினர். இந்த நேரத்தில்தான் இவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, பக்கத்துக் கிராமத்தில் ஊழியம் செய்து வரும் சகோ. சாம்ஜி மெய்டா அவர்களை வீட்டிற்கு அழைத்து, தங்களுக்காக ஜெபிக்கும்படியாக வேண்டிக் கொண்டார்கள். சகோ. சாம்ஜி மெய்டா அவர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்று இவர்களுக்காகவும், இறக்கும் தருவாயில் இருக்கும் பசுமாட்டிற்காகவும், பாரத்தோடு ஜெபம் செய்தார். தேவன் ஜெபத்தினைக் கேட்டு, பிசாசின் பிடியிலிருந்து அந்தக் குடும்பத்தை விடுவித்ததோடு, மட்டுமல்லாமல் அவர்களின் பசுமாட்டிற்கும் பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

இந்த அற்புதங்களைக் கண்ட அந்தக் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசிகளாயினர். அதன்பின் தேவன் ஊழிய பாரத்தினை சகோ. சோம்லா புரியா அவர்களுக்குத் தந்து ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பினை ஏற்று, ரூபாகேடா கிராமத்தில் அமைந்துள்ள தனது சொந்தக் குடிசையில் 2000ம் ஆண்டு ஊழியத்தினை ஆரம்பித்தார். அநேக ஜனங்கள் கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆண்டவரை ஆராதித்துவர ஆரம்பித்தனர். இதன் விளைவாக ஆண்டவரை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்து தனது சொந்த இடத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில் அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமை!

இந்தக் கிராம ஆலயம் **Dr. சுரேஷ் J. பால்** மார்த்தாண்டம் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2012-2014. TN/WPP-95/SR/2012-2014
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month



# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT

| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **வில்லியம் புரியா** |
| தந்தையின் பெயர் | : | சோம்சிங் புரியா |
| தாயார் பெயர் | : | கமலி புரியா |
| பிறந்த நாள் | : | 10.06.2006 |
| படிக்கும் வகுப்பு | : | 2nd Std. |
| சொந்த ஊர் | : | பிப்ளா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. சோம்சிங் புரியா,. இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். மிகவும் அந்தகாரத்தில் வாழ்ந்து வந்த இவர், ஒரு சுதேச ஊழியரின் மூலம் இயேசு கிறிஸ்துவை குடும்பத்துடன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து ஜெபித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்த இவருக்கு தேவன் இவரது சொந்த ஜனங்களைக் குறித்த பாரத்தினைக் கொடுக்கவே, ஊழியத்திற்கு அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** வில்லியம் நன்றாகப் படிப்பான்.

**ஜெபியுங்கள் :–** படிப்பிற்காக, சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. Oswald Samuel - Thoothukudi***

**ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்...**

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 163 **மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம், உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss